**மகநெகும இமல்சன் புறடக்சன் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனி - 2022**

----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மகநெகும இமல்சன் புறடக்சன் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தக்கங்களை தவிர்த்து, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்ான (SMEs) கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்ான (SMEs) கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 2.52 ஆம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நியமத்தினால் அனுமதிக்கப்படாவிட்டால் சொத்துக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவிற்கு இணங்காத வகையில் பின்வரும் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் ஈடுசெய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>I. கம்பனிக்கு தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா 42,132,000 தொகைக்கு அந்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 18,732,000 ஆன மீதி ஈடு செய்யப்பட்டு, அந்த கம்பனியிடமிருந்து பெற வேண்டியதாக ரூபா 23,400,000 தொகை நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.<br><br>II. கம்பனியால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இமல்ஷன் விற்பனை மூலம் பெற வேண்டிய ரூபா 8,731,355 ஆன மீதிக்கு, கம்பனியால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்க செலுத்த வேண்டிய ரூபா 7,697,175 தொகை ஈடு செய்யப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்த பெற வேண்டிய தொகை ரூபா 1,034,180 ஆக நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | | மற்றும் பொறுப்புகளை ஈடுசெய்யக்கூடாது. |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 4.7 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் 18 வருடங்களுக்கு முன்னர், அதாவது 2004 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பங்கு மூலதனமாக இந்த கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நியமத்திற்கு இணங்க நடைமுறை பொறுப்புகளின் வகைப்படுத்தலுக்கு உரித்தற்ற பெறுமதிகள் அகற்றப்பட்டு, நடைமுறைப் பொறுப்புகளின் பெறுமதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 17.15C ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில், மீளாய்வாண்டினுள் மோட்டார் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மோட்டார் வாகன மீளமதிப்பீட்டு திகை நியம்திற்கிணங்க மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களின் மீள்மதிப்பீட்டின் மூலம் கிடைத்த இலாபமான ரூபா 13,025,000 உரித்துக்களிலான மாற்றங்கள் கூற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 18.27 ஆம் பிரிவிற்கு இணங்க நிர்வாக மற்றும் நிதிச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் கணினி கட்டம்ப்பின் பெறுமதியை கணக்கு வைப்பதற்கு மற்றும் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணினி மென்பொருள் கட்டமைப்பு அருவ சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டு தேவையான வெளிப்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியின் பிற்போடப்பட்ட வரியை கணிப்பிடும் போது 30% வருமான வரி விகிதம் 18% ஆக கருத்திற்கொள்ளப்பட்டமை, மீள்மதிப்பீட்டு இலாபம் கருத்திற்கொள்ளப்படாமை மற்றும் பணிக்கொடை வரி பொறுப்பொன்றான இனங்காணப்பட்டமை ஆகிய காரணங்களால் ரூபா 514,780 தொகையான பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளாக இனங்காணப்பட்டிருந்த பெறுமதி கணக்காய்வினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 29.7 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அந்த பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 820,920 ஆகும். அதற்கமைய பிற்போடப்பட்ட வரி ரூபா 1,335,700 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் நியமத்திற்கு இணங்க சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 10.23 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உரித்துக்களிலான மாற்றங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,493,814 தொகையான கடந்த வருடத்தின் சீராக்கங்களுக்கு உரிய | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நியமத்திற்கிணங்க கடந்த வருடத்தின் சீராக்கங்களுக்குரிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (எ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம், தொடர்புடைய தரப்பினரான கம்பனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள், கம்பனி மற்றும் மகநெகும மதியுரைக் கம்பனி / மக நெகும வீதி நிர்மாண கம்பனிக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடனான குத்தகை உடன்படிக்கை மற்றும் கம்பனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கிடையேயான விலையிடல் கொள்கை மற்றும் ஏனைய பிணைமுறிகளுக்குரிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் நியமத்திற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்பின் பெறுமதி ரூபா 62,142,477 ஆக காணப்பட்டதுடன், கணக்காய்வுக்கு பௌதீக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மாதாந்த இருப்பு அறிக்கைகளின் பெறுமதி மற்றும் கணக்கின் பெறுமதி ஆகியவற்றுகிடையே ரூபா 429,427 ஆன தொகையும் அவதானிக்கப்பட்டமையால், இருப்பின் பெறுமதியின் சரியானதன்மை தொடர்பில் கணக்காய்வில் நிச்சயமற்றதன்மையொன்று நிலவியது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணக்காய்வுக்கு பௌதீக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 17,991,717 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி புஜ்ஜியமான | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இன்னும் பயன்பாட்டில் உள்ள மற்றும் பூஜ்ஜிய கொண்டு செல்லும் மதிப்பைக் கொண்ட சொத்துக்கள் மீண்டும் |

| | |
|---|---|
| போதிலும், அந்த சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் திருத்தப்பட்டு கணக்கு வைப்பதற்க மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டு நியாயமான பெறுமதியில் கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த மீதிகள் ஒப்பிடப்பட்டு, திருத்துவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கிடையே நிலவும் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு, உறுதிப்படுத்தல்கள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | உருப்படி | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றின் பிரகாரம் மீதி ரூபா | வேறுபாடு ரூபா |
|---|---|---|---|---|
| 1 | இமல்ஷன் விற்பனை மூலம் பெற வேண்டிய மீதி | 8,731,353 | 4,589,093 | 4,142,260 |
| 2 | முற்பணம் | 7,697,174 | 9,798,822 | 2,101,648 |
| 3 | செலுத்த வேண்டிய பொறி மற்றும் இயந்திர வாடகைக் கட்டணங்கள் | 3,412,145 | 3,230,227 | 181,918 |
| 4 | செலுத்த வேண்டிய வாடகை | - | 32,090,912 | 32,090,912 |

### 1.5.4 அமைப்பின் தொடர்ச்சியான நிலவுகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்டிருந்த 2023 மார்ச் 28 ஆந் திகதிய 23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த கம்பனியை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கம்பனியின் தொடர்ச்சான நிலவுகை நிச்சயமற்றதன்மை தொடர்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும அந்த பணி மேற்கொள்ளப்பட்டிராததுடன், அதற்கமைய கம்பனியின் தொடர்ச்சான நிலவுகை நிச்சயமற்றதாக நிலவியமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கம்பனியை கலைப்பதற்காக கலைப்பாளராக ஒரு தனியார் கம்பனியை நியமிக்க 2023 ஆகஸ்ட் 7 ஆந் திகதி கம்பனியின் அதிவிசேட வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அரச நிதி முதலிடப்பட்டு கூட்டிணைக்கப்பட்ட இந்த கம்பனியின் சொத்துக்களில் சரிபாதிக்கு கம்பனியின் தனியார் பங்குதாரரான கம்பனியின் தலைவரும் உரிமை கோரியது ஒரு சிக்கலான சூழ்நிலையாக இருந்ததால், இந்த கலைப்பாளரின் நியமனத்தை இடைநிறுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2023 செப்தம்பர் 07 ஆந் திகதி அன்று கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 187(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர் ஒருவராக அதிகாரங்களை அமுல்படுத்தும் அல்லது பணிகளை நிறைவேற்றும் நபரொருவர் நிறுவனத்தின் நலன்களைக் கருத்தில் கொண்டு நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டும், மேலும் நிறுவனத்தின் சொத்துக்களின் உரிமையைத் தீர்த்து வைப்பதற்கும் அமைச்சரவையின் தீர்மானத்தை செயல்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ) | மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் தன்னார்வ ஓய்வூதிய முறையின் அடிப்படையில் நிறுவனத்தின் ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். மேலும், கலைப்பு செயல்முறை தொடங்கும் வரை அத்தியாவசிய கடமைகளைச் செய்ய 2023 ஆகஸ்ட் 7 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், 07 உத்தியோத்தர்கள் நாளாந்த சம்பள முறையின் கீழ் மீண்டும் பணியமர்த்தப்பட்டனர். இருப்பினும், தற்போது, நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு எந்த அலுவலகமும் இல்லாதிருந்ததுடன், எந்த ஊழியரும் வேலைக்கு வராததால், கணக்காய்வுக்கு தேவையான புத்தகங்கள், கோப்புகள், | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை மேணுவதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்காக உரிய தகவல்கள் உரிய காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தகவல்கள் மற்றும் விளக்கங்களைப் பெற முடியாதிருந்தது.

### 1.5.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பணிக்கொடை ஒதுக்கம் | 10,866,300 | பணிக்கொடை பெறுமதி கணிப்பிடப்பட்ட முறை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் உரிய காலப்பகுதிகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய பெறுமதி சேர் வரி | 731,154 | பெற வேண்டிய பெறுமதி சேர் வரிக்குரிய கணிப்பீடுகள் | | |
| (இ) | கம்பனிக்கு உரியதாக நிலவும் வழக்குகள் | 43,948,644 | CHC/299/2016/MR | | |
| | | 23,400,000 | CHC/298/2016/MR | | |
| | | 164,400,000 | CHC/594/15/R வழக்கு கோவைகள் மற்றும் வழக்குகளின் தற்போதைய நிலைமை | | |
| (ஈ) | கம்பனியால் தனியார் கம்பனியொன்றுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய மீதி | 24,500,000 | மீதி உறுதிப்படுத்தல் பதிவேடுகள் | | |
| (உ) | 2015 ஆம் ஆண்டுக்கான உத்தேச பங்கிலாபம் | 29,765,787 | பங்கிலாபம் பிரசுரிக்கப்பட்டமையை உறுதிப்படுத்த பணிப்பாளர் சபை தீர்மானங்கள் அல்லது வருடாந்த பொதுக்கூட்ட | | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அறிக்கைகள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இணங்க புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் உரிய காலப்பகுதிகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கம்பனி நிறுவப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக் குரிய 2 ஏக்கர்கள் மற்றும் 9.83 பேர்ச் பரப்பளவான காணியின் மதிப்பீட்டு பெறுமதி | 9,620,000 | காணி மற்றும் கட்டிடங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்கள் | | |
| (எ) | மோட்டார் வாகன மீளமதிப்பீடு | 13,025,000 | மோட்டார் வாகன மீளமதிப்பீட்டு அறிக்கை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் உரிய காலப்பகுதிகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கட்டிட பழுதுபார்த்தல் | 3,483,255 | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் 2022.12.31 ஆந் திகதியில் உள்படியான நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை | | |
| | அலுவலக உபகரணங்கள் | 4,906,138 | | | |
| | தளபாடங்கள் | 4,100,849 | | | |
| | இயந்திரங்கள் | 11,725,250 | | | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133 ஆம் பிரிவு | கம்பனியால் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக்கும் ஒரு தடைவ பங்குதாரர்களின் வருடாந்த பொதுக்கூட்டமொன்று கூட்டப்பட வேண்டிய போதிலம், 2016 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய PED 01/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவருக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்துவதற்காக மாதாந்தம் ரூபா 50,000 படியான கொடுப்பனவை செலுத்த இயலுமானதாக இருந்த போதிலும், கம்பனியால் மீளாய்வாண்டினுள் நான்கு உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையினை விஞ்சி ரூபா 2,925,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய செயற்படுவதற்கு மற்றும் மிகை கொடுப்பனவுகளை அறவிடுவதற்கும் தாமதிக்காது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 83 ஆம் பிரிவு | சம்பளம் செலுத்தும் போது ஊழியர்களின் தொழில் வருமானத்தின் அடிப்படையில் தொழில் தருநரால் உழைக்கும் போது வரி கழிக்கப்பட வேண்டிய போதிலும், ஊழியர்களின் சம்பளத்திலிருந்து | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சட்டத்தின் விதிகளின்படி செயல்படவும், அதற்கு இணங்காத தொடர்புடைய கொடுப்பனவுகளைப் பரிந்துரைத்து, சான்றளித்து, ஒப்புதல் அளித்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவிடப்படாது கம்பனியால் ஊழைக்கும் போது செலுத்தும் வரியாக ரூபா 123,813 செலுத்தப்பட்டிருந்தது. | | உத்தியோகத்தர்களிடமிருந்து பணத்தை மீட்டெடுக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கைக் கணக்காய்வு நியம இலக்கம் 580 இன் 10 மற்றும் 11 ஆம் பிரிவுகள் | முகாமைத்துவ பிரதிநிதித்துவக் கடிதம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வுக்கு எழுத்துப்பூர்வ பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 38,895,016 ஆன நட்டமாக காணப்பட்டதுடன், அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,650,715 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 45,545,731 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இமல்ஷன் உற்பத்தி விற்பனை வருமானம் ரூபா 139,203,601 இனால் குறைவடைந்தமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 4,598,612 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் வருமானம் கடந்த ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடும் போது 59 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதனோடு ஒத்ததாக விற்பனைக் கிரயமும் 51 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதற்கமைய உரிய வருமானமும் 84 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

- மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்கள் கடந்த வருடத்தின் ஏனைய வருமானங்களுடன் ஒப்பிடப்பட்ட போது, 241 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டின் நிதிக் கிரயத்தினை கடந்த வருடத்தின் நிதிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது 182 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மேலதிகப்பற்று வட்டி அதிகரித்தமை இதற்க பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் கம்பனியின் நடைமுறை சொத்துக்கள் விகிதத்தினை கடந்த வருடத்தின் நடைமுறைச் சொத்து விகிதத்துடன் ஒப்பிடும் போது 1.35 சதவீதம் முதல் 1.50 சதவீதம் வரையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், விரைவுச் சொத்து விகிதத்தினை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 1 சதவீதம் முதல் 0.50 சதவீதம் வரையான வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்தின் மொத்த இலாப விகிதம் முறையே 9 சதவீதம் மற்றும் 23 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தின் தேறிய சொத்து விகிதம் 3 சதவீதமான போதிலும், மீளாய்வாண்டின் போது 37 சதவீத மறைப் பெறுமதியை கொண்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பனியொன்றாக செயற்பட்ட வீதி நிர்மாண மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனியை (RC & DC) முழுமையாக மூடுவதற்கும், தனியார் பொதுக் கம்பனியொன்றை தாபிக்கும் இயலுமை தொடர்பில் பெருந்தெருக்கள் அமைச்சினால் மற்றும் திறைசேரியினால் பரிசோதிப்பதற்காகவும், 2004 சனவரி 21 ஆந் திகதி இடம்பெற்ற அமப/04/0053/104/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மகநெகும இமல்ஷன் உற்பத்தி (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்க சட்டங்கள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் செயல்படுவதன் மூலம் அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2004 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 04/0848/004/013-I ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கட்டுமானத் தொழில் சங்கம் மற்றும் தேசிய ஒப்பந்ததாரர்கள் சங்கத்துடன் கூட்டாண்மை செய்து கொள்வதன் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான மூன்று துணை நிறுவனங்களை நிறுவ ஒப்புதல் அளிக்கப்பட்டது, ஆனால் அந்த அமைச்சரவையின் தீரமானத்திற்கு முன்னர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 795/2004 இலக்கமுடைய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2004 யூன் 10 ஆந் திகதி கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்க சட்டங்கள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் செயல்படுவதன் மூலம் அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கம்பனியின் மூலதனப் பங்களிப்பிற்காக ரூபா 100 படியான 02 பங்குகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மற்றும் கம்பனியின் தலைவருக்கு வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த பங்குகளுக்கு கம்பனிக்கு பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக மூலதனப் பங்களிப்பாக 2004 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகைக்காக கம்பனி இதுவரை பங்குகளை வெளியிட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனியின் மூலதனப் பங்களிப்புக்காக பங்கு வெளியிடுதல் மற்றும் வெளியிடப்பட்ட பங்குகளுக்கு பணம் அறவீடு செயவதற்குரிய சட்டங்கள், விதிகள் மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் பெரும்பான்மை உரித்து திறைசேரிக்கு சாட்டப்படும் வகையில் எஞ்சிய பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைக்கும் வகையில் கம்பனியின் அமைப்பு அகவிதியை மாற்றியமைப்பதற்காக 2013 பெப்ரவரி 18 ஆந் திகதிய 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் அமைப்பு அகவிதி திருத்தியமைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்க சட்டங்கள், விதிகள் மற்றும் தீர்மானங்களின் பிரகாரம் செயல்படுவதன் மூலம் அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு சொந்தமான மணித்தியாலமொன்றுக்கு 10,000 இமல்ஷன் இயந்திரக்கூடம் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் படியாக 20 நாட்கள் உற்பத்தி செயன்முறையில் ஈடுபடுத்துவதன் மூலம் வருடாந்தம் 12 மில்லியன் உற்பத்தி இயலளவினை பேண முடியும் என எதிர்வுகூறப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இயந்திரக்கூடத்தின் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச கொள்ளளவு அளவுகள் தீர்மானிக்கப்பட வேண்டும், அதன்படி வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக இமல்ஷன் தேவைப்பாட்டினை பகுப்பாய்வு செய்து நிறுவனத்திடமிருந்து அதிகபட்ச கட்டளைகளை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூலை வரையிலும் அதன் உற்பத்தி முறையே 766,000 லீட்டர், 2,633,300 லீட்டர், 418,500 லீட்டர் மற்றும் 950,500 லீட்டர்கள் மாத்திரமாக காணப்பட்டது. | | |
| (ஆ) | கம்பனி மூடப்பட்ட காரணத்தால் 2023 ஒக்தோபர் 20 ஆந் திகதி முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் இந்த இயந்திரகூடம் மீள பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் இயந்திரக்கூடத்தின் உற்பத்தி நவடிக்கைகள் இடம்பெறாமையால் தற்போது இயந்திரகூடம் முழுமையாக குறைப்பயன்பாட்டுடன் நிலவியது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரசாங்க வளங்களை உகந்த அளவில் திறம்பட பயன்படுத்துவதன் மூலம் வீணாவதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 ஏனைய அமைப்புகளின் வளங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் மூலதனப் பங்களிப்பின் பெரும்பாலான பகுதி மற்றும் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களின் பெரும்பான்மை சதவீதம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு துணைக் கம்பனியொன்றாக 2004 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் எந்தவொரு பிரதிபலனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனியால் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களின் கூலதன கிரயம் மற்றும் கம்பனியின் பங்குடமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நலன்களை சரியான சீராக்கி நிதிக்கூற்றுக்களில் நியாயமாக வெளிப்படுத்த வேண்டும். |